JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **32/2017** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | **S. Thangam** | Village | |
| Father's Name | **Selvaraj** | Taluk | |
| | | Age | |

**Accused absent**. **u/s**. 317 **crpc petition filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 05.11.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் தற்போது கோவை மாவட்டம் மது விலக்கு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.12.2011 ம் தேதி திருப்பூர் மாவட்டம் திருப்பூர் வடக்கு காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணியில் இருந்த போது காவல் நிலைய குற்ற எண். 5847/2011 சட்டபிரிவு 392 இ.த.ச. பிரிவின் கீழான வழக்கில் எதிரி தங்கராஜ் என்ற செம்புலிங்கம் என்பவரை கைது செய்து விசாரணை செய்த போது மேற்படி எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் ஈரோடு மாவட்டம், பெருந்துறை காவல் நிலைய குற்ற எண். 839/2011 சட்டபிரிவு 392 இ.த.ச. பிரிவின் வழக்கில் தானும், மற்றொரு எதிரி வைத்தீஸ்வரன் என்பவரும் சேர்ந்து கடந்த 05.11.2011 ம் தேதி பெருந்துறை R.S புரம் ரோட்டில் ஒரு மளிகை கடையில் தனியாக இருந்த ஒரு பெண்ணிடம் 5 ½ பவுன் தாலிக் கொடியை அறுத்துச் சென்றதாக ஒப்புக்கொண்டார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பெருந்துறை காவல் நிலைய குற்ற எண். 839/2011 சட்டபிரிவு 392 இ.த.ச. பிரிவின் வழக்கினை வாதி தமிழ்மணி கொடுத்த எழுத்து மூலமாக புகாரை பெற்று சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சாமியப்பன் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையுடன்

வாதியின் புகாரையும் இணைத்து கணம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட விவரங்களை பொது நமுனா மூலம் ஆய்வாளர் பெருந்துறை அவர்களுக்கு தெரியப்படுத்தினேன். பெருந்துறை ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்த என் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பெருந்துறை காவல் நிலைய வழக்கு சம்பந்தமாக எந்த தகவலும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை பெருந்துறை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் பெற்று பொது நமுனா பெருந்துறை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு அரசு ஆவணத்தை ஒரு அலுவலகத்திலிருந்து மற்றொரு அலுவலகத்திற்கு அனுப்ப டிஸ்பேட்ச் நம்பர் போட்டு தான் அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். நான் அனுப்பிய ஒப்புதல் வாக்குமூலத்தில் அது போன்ற குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். நான் பெற்ற அ.சா.ஆ.5 ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரியல்ல.

2. வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபரை கைது செய்யும் போது அவர் சொல்லும் பொருட்கள் கைப்பற்றப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் இந்த வழக்கு சொத்து மற்றொரு எதிரியான வைத்தீஸ்வரனிடம் இருந்ததால் கைப்பற்றவில்லை. என்னுடைய வழக்கில் யார் யார் எதிரிகள் என்றால் இதே எதிரிகள் தான். அந்த வழக்கின் குற்ற இறுதி அறிக்கை யார் தாக்கல் செய்தார்கள் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. வைத்தீஸ்வரனை என்னுடைய வழக்கில் கைது செய்தேனா என்றால் கைது செய்யவில்லை.

3. வைத்தீஸ்வரனை ஏன் கைது செய்யவில்லை என்றால் துப்பு வைத்து தேடி வந்த நிலையில் எதிரி கிடைக்காததால கைது செய்யவில்லை. நான் சொல்வது போல் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. தங்கராஜ் என்கிற செம்புலிங்கம் மீது காவல் நிலையத்தில்

**வைத்து பொய் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் 2 ம் எதிரியை கைது செய்யவில்லை என்றால சரியல்ல.**

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை